<u>முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை</u>

<u>முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,</u>

<u>முதன்மை சார்பு நீதிபதி.</u>

<u>**MCOP.No.174/2024**</u>

பெயர் :– முருகம்மாள் (P.W.–1)

க/பெ. :– மணிகுழந்தை

தேதி :– 19.11.2025.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:–

என்னுடைய வயது தற்போது 60 ஆகும், இந்த வழக்கின் விபத்து நடக்கும்போது நான் மேற்கிலிருந்து கிழக்கு நோக்கி நடந்து வந்துகொண்டிருந்தேன். நான் மீன் வியாபாரம் செய்துகொண்டிருந்தேன் என்று சொன்னால் சரிதான். சம்பவ தினம் நான் மீன் வியாபாரம் செய்து கொண்டிருந்தேன். சாலையின் குறுக்கே சென்று விபத்தினை ஏற்படுத்திக்கொண்டேன் என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் என் மீது மோதிய வாகனத்தின் பதிவு எண், என்ன வாகனம் என்று எனக்கு தெரியாது என்று சொன்னால் சரிதான். விபத்தை ஏற்படுத்திய வாகனம் என் மீது மோதிவிட்டு கொஞ்ச துாரம் சென்று நின்றது. அந்த வாகனத்தில் இருந்தவர்கள் தான் அடிப்பட்ட என்னை துாக்கி எனக்கு தண்ணீர் கொடுத்து என்னை ஆட்டோவில் மேலப்பெரும்பள்ளம் ஆரம்ப சுகாதார அரசு மருத்துவமனையில் முதல் சிகிச்சைக்காக என்னை அழைத்துச் சென்றார்கள்.

அங்கு எனக்கு முதல் சிகிச்சை அளிக்கப்பட்டு பின்னர் மயிலாடுதுறை அரசு பொது மருத்துவமனைக்கு அழைத்துச்சென்றார்கள். மயிலாடுதுறை அரசு மருத்துவமனையில் உள் நோயாளியாக என்னை சேர்த்து என் காலில் அறுவை சிகிச்சை செய்ய வேண்டும் என்று என்னை காலதாமதம் ஏற்பட்டதால் என்னை மயிலாடுதுறை வைரம் மருத்துவமனைக்கு என்னை சிகிச்சைக்காக அழைத்துச் சென்றார்கள். அங்கு தான் எனக்கு இடுப்பில் உள்ள பந்துகிண்ணமூட்டில் அறுவை சிகிச்சை செய்து இடுப்பில் பிளேட் வைத்து அறுவை சிகிச்சை செய்தார்கள். அந்த பிளேட் இன்னும் எடுக்கவில்லை. எனது இடுப்பில் ஏற்பட்ட எலும்பு முறிவு சேர்ந்துவிட்டது என்று சொன்னால் அது சேர்ந்து விட்டது என்று சொல்ல முடியாது. எனக்கு விபத்தை ஏற்படுத்திய வாகனத்தை மோட்டார் வாகன ஆய்விற்கு சென்றதா என்பது பற்றி எனக்கு தெரியாது.

காவல் நிலையத்தில் என்னுடைய ஆவணங்களை யாரிடமும் கொடுக்க கூடாது என்று நான் மனுக்கொடுத்திருந்தேனா என்றால், எனக்கு அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை. காவல் நிலையத்திலிருந்து காப்பீட்டு நிறுவனத்தினால் எந்த வித ஆவணத்தையும் பெற முடியவில்லை என்றாலும், யாரிடமும் எனது ஆவணத்தை கொடுக்க கூடாது நான் கூறியிருந்தேன் என்றாலும் சரியல்ல. நான் யாரிடமும் மனு கொடுக்கவில்லை. மோட்டார் வாகன ஆய்வறிக்கை எனது தரப்பில் தாக்கல் செய்தீர்களா என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியவில்லை. விபத்து வாகனத்தை ஓட்டிய நபருக்கு வாகனம் ஓட்டும் உரிமம் உள்ளதா என்பது பற்றி எனக்கு தெரியாது. மோட்டார் வாகன அறிக்கையை தாக்கல் செய்தால் தான் விபத்து ஏற்படுத்திய வாகனத்தை ஓட்டிய நபருக்கு ஓட்டுனர் உரிமம் உள்ளதா என்பதை அறிய முடியும் என்று சொன்னால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. சரியான விபரங்களை இவ்வழக்கில் தாக்கல் செய்யாததாலும், காப்பீட்டு நிறுவனத்தினால் எந்தவொரு விபரத்தையும் சேகரிக்க முடியாததாலும் இந்த வழக்கில் காப்பீடு நிறுவனம் இழப்பீடு தர கடமைப்பட்டவர் அல்ல என்று சொன்னால் சரியல்ல. எனக்கு ஏற்பட்ட காயத்தில் எலும்பு முறிவு சரியாகவிட்டது என்றாலும் சரியல்ல,. நான் கோரியுள்ள நஷ்ட ஈட்டுத்தொகை அதிகம் என்று சொன்னாலும் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.